**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG10 – நிலை I (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. அருள் மணம் வீசுபவர் யார்?
2. தமிழ்மொழி எதனைப் போன்றது?
3. தமிழன் இதயம் என்னும் நூலை எழுதியவர்?
4. உலகப்பொதுமறை என்று போற்றப்படும் நூல்?
5. பழமொழி எந்த நூல்களுள் ஒன்று?
6. வீட்டில் வளரும் மருந்து மரம் போன்றவர் யார்?
7. பலாப்பழம் போன்று இருந்தது?
8. குமரிக்கண்டம் என்று அழைக்கப்படுவது?
9. நஞ்சுவின் வீட்டிற்குத் திருட வந்த திருடர்களின் எண்ணிக்கை?
10. கலைக்கூடம் போல் காட்சிதரும் கோயில் எது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. தமிழை முடியரசனார் எவ்வாறு வாழ்த்துகிறார்?
2. வாழ்க வாழ்க என்ற பாடல் உணர்த்தும் கருத்துகள் யாவை?
3. அப்பர் பாடல்கள் எந்தெந்தத் திருமுறைகளில் இடம்பெற்றுள்ளன?
4. வட்டாசுரன் என்ன வடிவத்தில் திருமாலுடன் போரிட்டான்?
5. இயேசுவின் திருவடிகள் எப்படிப்பட்டவை?
6. சீதக்காதியின் உதவி பெற்ற புலவர் ?
7. தமிழ்த்தாய் எந்தத் தொட்டிலில் கிடத்தித் தாலாட்டுப் பெறுகிறாள்?
8. செம்பில் தண்ணீர் மொண்டு விருந்தினர்களிடம் கொடுத்த தலைவி கூறியது யாது?
9. எந்தெந்த அடிப்படையில் தமிழ் பழமையான சிறந்த மொழி எனலாம்?

10. நஞ்சு தேர்வில் எழுதிய உணவுப் பொருள்கள் யாவை?
11. உயிர்மெய் எழுத்து என்றால் என்ன?
12. தலை வாழை இலை உணவு என்று எதற்குப் பெயர்?
13. நோபல் பரிசில் எவையெல்லாம் இடம்பெறும்?
14. கரிகாலன் புலவர்க்கு என்னென்ன தந்தான்?
15. இடுகுறிப் பெயருக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக?

**பகுதி – இ**

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. நல்ல அறிவுரைகளை உறவினரிடம் கேட்டுப் பயன்பெற வேண்டுமென முன்றுரையரையனார் கூறும் கருத்துகளை எழுதுக ?
2. திருநாவுக்கரசர் – ஆசிரியர் குறிப்பு வரைக.
3. அபிராமி என்ற பெண் தெய்வம் குறித்து எழுதுக.
4. நோபல் பரிசு குறித்து எழுதுக.
5. வேற்றுமையின் வகைகளை எழுதுக.
6. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் – குறிப்பு வரைக.
7. முத்தொள்ளாயிரம் பாடலில் இடம்பெற்ற வீரச்சுவையை எழுதுக.
8. திருப்பருத்திக்குன்றம் – குறிப்பு வரைக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. மாத்திரை என்றால் என்ன? எழுத்துகளுக்கு வழங்கப்பெறும் மாத்திரை அளவு குறித்து விரிவாக எழுதுக.
2. தமிழ்விடு தூது பாடலில் இடம்பெற்ற கருத்துகளைச் சுருக்கி எழுதுக.
3. துன்பத்திலும் உறவினர்கள் பயன்பட வேண்டுமென முன்னுறையரையனார் பழமொழியில் கூறும் கருத்துகளை எழுதுக

**பகுதி – உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. வாழைமரம் குறித்துக் கட்டுரை வரைக
2. முக்காலங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக .

*****